www.tamilarangam.net

# தமிழீழம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE, FRANCE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









திலீபனின் நினைவு நாளன்று மக்கள் எல்லா இடங்களிலும் பெருமளவில் கூடி அஞ்சலி செலுத்துகின்றனர்

www.tamilarangam.net

# புலிகளின் குரல்

## இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு மரண அடி

பத்திரிகைத் தணிக்கை, இராணுவ அடக்குமுறை, பயமுறுத்தல், ஆயுதமேந்திய குழு ஒன்றின் ஆள்கடத்தல், ஆயுத முனையில் வாக்களிக்க மிரட்டல் போன்ற கொந்தளிப்பான சூழ்நிலைகளுக்கு மத்தியில் தமிழீழத்தில் "ஜனநாயகத்" தேர்தலொன்று நடந்து முடிந்திருக்கிறது.

"ஈழத்தமிழர் பிரச்சினையை இலங்கை இந்திய ஒப்பந்தத்தினாலோ, அன்றி சிங்களப் பாராளுமன்றத்துக்குச் செல்வதனாலோ தீர்த்துவிடமுடியாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அது திசை திருப்பும், பின்தள்ளும்" என்று கூறிய விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணிக்கும்படி மக்களுக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று வடக்கு கிழக்குப் பகுதியில் சுமார் 50% மக்கள் தேர்தலில் பங்கு பற்றாமல் புறக்கணித்துள்ளனர் அல்லது ஆயுதமுனையில் வாக்களிக்கும்படி அச்சுறுத்தப்பட்ட நிலையில் தமது வாக்குகளைச் செல்லாத வாக்குகளாக்கியுள்ளனர்.

இப்பகுதியில் சுமார் 2 இலட்சம் சிங்கள வாக்காளர்கள் வாக்களித்துள்ள நிலையிலும்,

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியினால் தூண்டப்பட்டு முஸ்லீம்கள் தனி அமைப்புக்கு முனைப்பாக வாக்களித்துள்ள நிலையிலும்,

கடுமையான பத்திரிகைத் தணிக்கையினால் வதந்திகள் சாகாவரம் பெற்று, அதனால் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிலேயே பலர் ஏமாந்து ஈரோஸ் அமைப்புக்கு வாக்களித்துள்ள நிலையிலும்,

பல இடங்களில் வாக்காளர்கள் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டு கட்டாயமாக வாக்களிக்க வைக்கப்பட்ட நிலையிலும்,

தமிழீழத்தில் 50% வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்திருப்பது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தேர்தல் புறக்கணிப்புக் கோரிக்கைக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

3 மாதங்களுக்குமுன் நடைபெற்ற வடகிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு 70 இடங்களைப் பிடித்து "ஆட்சி"யை நடத்தும் ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டணி இத்தேர்தலில் மேலும் இரு அமைப்புகளுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிட்டு 12.7%மான வாக்குகளைமட்டுமே பெற்றிருக்கிறது. இந்திய அரசின் ஆதரவு அணியான இக்கூட்டணியைத் தோற்கடித்ததன் மூலம் தமிழீழ மக்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தாம் ஆதரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## அமைதியின் ஆளுகையில்

உஷ்............

உங்கள் பாதங்களை
பக்குவமாக பதியுங்கள்
ஆங்காங்கே—
வீரத்தின் வித்துக்கள்
விதைக்கப்பட்டுள்ளன......

அந்நியப் பதிவுகளா......?
அவைகளை
கண்ணிவெடிகள்
கவனித்துக்கொள்ளும்
கவலையே வேண்டாம்

வெண்புறாக்களை
பக்குவமாக பாதுகாத்து
பதுக்கிவையுங்கள்—
வானத்தில்—
வல்லூறுகளே
வட்டமிடுகின்றன......

வண்ணத்துப் பூச்சிகள்கூட
இங்கு—
பீரங்கியால்
துகள்களாக்கப்படுகின்றன......

எல்லாமே......
மௌனமாகத் திணிக்கப்பட்டு
அமைதியாக—
அழிக்கப்பட்டு விடப்படுகின்றது

தீக்குச்சி உரசும்
சப்தம்கூட—
திடுக்கிடவே வைக்கின்றது......

இருப்பினும்—
குண்டுச்சத்தங்களினூடேயும்
நம்குழந்தைகள்
குதூகலமாகத்—
தூங்குகின்றன......



www.tamilarangam.net



# தமிழீழம் வாழ்த்துகிறது

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள சேதி கேட்டு தமிழீழம் களிப்புற்று நிற்கிறது.

அவரது ஆட்சிக்காலத்தில் தமிழீழம் விடுதலை அடையும், பல்லாண்டுகளாக அல்லலுற்று வரும் தமிழர் துயர் தீரும் என்று தமிழீழத்திலும், உலகெங்கிலும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தமிழீழ மக்கள் சார்பில் மனமார வாழ்த்துகிறோம்.



(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்கிற்கு அதிகம் இல்லாமலும் இருக்க வேண்டும் எனவும் உடன்பாடு கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் மந்திரிமார் எண்ணிக்கை மீதான இந்த மட்டுப்படுத்தல் முயற்சி பல்வேறு சமுதாய பொருளாதார சமூக அமைப்புகளூடாக வாழ்ந்துவரும் வடகிழக்கு மாகாண சிறுபான்மையினரிடையே பிளவினை ஏற்படுத்தும் கபட நோக்குடனேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதில் நியாயமான சந்தேகத்திற்கு இடமுண்டு.

**(C) வெளிநாட்டுக் கடன் உதவி**

போரினால் சீர்கெட்டு இருக்கும் வடகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கேற்ப தோதான வகையில் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதற்கு வெளிநாட்டுக் கடன் உதவி இன்றியமையாதது ஒன்றாகும். எனவே இதனை மத்திய அரசுக்குரிய பட்டியலில் இருந்து விடுவித்து இரு சாராரும் கையாளக்கூடிய விதத்தில் பொதுப் பட்டியலில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

**(D) துறைகளும், துறைமுகங்களும்**

இவ்விடயங்கள் மத்திய அரசுக்குரிய பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது பொதுப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டிய ஒன்று.

**(E) ஆறாவது திருத்தச் சட்டம்.**

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 6-வது திருத்தப் பிரிவின் ஏற்பாடுகளுடன் கூடிய பிரிவு 157-A அடிப்படை உரிமைமீறும் அம்சங்களைக் கொண்டிருப்பதால் இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தின் 6-வது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.

6-வது திருத்தச் சட்டம் நீக்கப்படாவிட்டால் 13-ஆம் திருத்தச் சட்டப் பிரிவுகள் 154 B (6) 154 F (7) என்பனவற்றிற்கு அமைவாக தெரியப்படும் முதல்வர், மந்திரிகள், உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்வது நடைமுறைச் சாத்தியம் அற்ற செயல் என்றாகி விடும்.

(முற்றும்)

www.tamilarangam.net

# 13-வது திருத்தச் சட்டம்

(கடந்த இதழ் 29-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பாரம்பரியத்தினை நோக்குமிடத்து தங்களது மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தில் ஒதுக்கீடு செய்ய பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் சம்பந்தமாக, மிகவும் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருத்தல் வேண்டும். இத்திருத்தங்கள் மாற்றல்கள் தமிழர்களது மாகாணசபையின் சம்மதமின்றி, அல்லது அத்தகைய சம்மதத்திற்கு முரணாக செயல்படின் பெரும் அரசியல் நெருக்கடிகளை மீண்டும் இலங்கையில் தோற்றுவித்துவிடும்.

### பாராளுமன்ற சட்டங்களும் மாகாணசபை சட்டங்களும்

பிரிவு 154G (b) மிகப் பரவலான அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு அளித்துள்ளது. இதன் கூற்றுப்படி இருசபைகளினால் இயற்றப்படும் சட்டங்கள் ஒரே விடயம் தொடர்பில் ஒன்றுடன் ஒன்று முரண்படும் வேளை. பாராளுமன்ற சட்டமே வலிவுடமை பெற்றது எனவும் மாகாணசபை சட்டம் அதனுடன் இணைந்து செல்லல் வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

### 10. மாகாண நிர்வாக அதிகாரிகளும் தொடர்புகளும்

#### A. ஜனாதிபதியின் நெறிப்படுத்துகை

பிரிவு 154 L-ன் கீழ் மாகாண ஆளுனர், மாகாணசபை என்பன ஜனாதிபதியின் நெறிப்படுத்துதலினை ஏற்று இணங்கி ஒழுக மறுத்துள்ள சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி ஆட்சியினை மாகாணத்தில் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது.

இந்திய அரசியல் அமைப்பின் கீழ் உள்ள ஓர் ஜனாதிபதியினைக் காட்டிலும் அரசியல் அமைப்பு ரீதியாக இலங்கை ஜனாதிபதி அளவற்ற நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருப்பதாலும், இலங்கை ஜனாதிபதிதேர்தலின் வேட்பாளர் குறுகிய அடிப்படையில் அரசியல் ரீதியாக அதிகாரப் பகிர்வுக்கு எதிரான கொள்கை உடையவர்களாகக் காணப்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் நிறைந்து காணப்படுவதாலும், தற்போதைய ஜனாதிபதிகூட வடக்கு, கிழக்கு இணைப்பிற்கான தனது எதிர்ப்பினை பகிரங்கமாக பிரகடனப் படுத்தியிருப்பதாலும் இப்பிரிவின் கீழுள்ள ஜனாதிபதி அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

### ஜனாதிபதி ஆட்சி

பிரிவு 154 L மாகாணம் ஒன்றின் நிர்வாகம் அரசியல் அமைப்பு விதிகளுக்கு இணங்கி நடாத்தப்பட முடியாத சூழ்நிலையில் உள்ளது என ஜனாதிபதி தன்னளவில் திருப்தியுற்றால் அல்லது அத்தகைய நிகழ்வு உருவாகியுள்ளது என்ற ஓர் அறிக்கை ஆளுனரால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டால் மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்பினை தன் வசம் கைக்கொள்ள வழிவகைகள் செய்துள்ளது. ஆளுனர் ஒருவர் ஜனாதிபதி ஒருவரால் நேரடியாக அவர் விருப்பத்தின் அடிப்படையிலேயே நியமனம் பெற்றுள்ள வேளை அத்தகைய ஓர் ஆளுனரிடம் இருந்து தான் விரும்பும் விதத்தில் அறிக்கை ஒன்றினைப் பெறுவதில் ஜனாதிபதிக்கு என்றைக்கும் சிரமம் இருக்கப்போவதில்லை. இருந்த வேளையிலும் அத்தகைய ஓர் அறிக்கை இன்றியே மாகாண நிர்வாகம் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடத்தப்படவில்லை என அவர் தன்னளவில் ஒருதலைப்பட்சமான ஓர் முடிவுக்கு வந்தும் மாகாணசபை ஆட்சியை தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மாகாணம் ஒன்றினை ஜனாதிபதி ஒருவர் இத்தகைய இலகுவான வழிகளின் ஊடாக தொடர்ச்சியாக தன் ஆளுகையின் கீழ் வைத்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதால், அவசரகால நிலைப் பிரகடனம், ஜனாதிபதி ஆட்சி என்பன பிரகடனம் செய்வதற்கான அரசியல் அமைப்பு வழிமுறைகளில் மாற்றம் எதுவும் கொண்டுவராத வேளையில் பெரும்பான்மை சிங்கள இனவாத ஜனாதிபதிகளின் இருப்புபாதங்களின்கீழ் கடமை ஆற்ற வேண்டிய ஓர் நிரந்தர சூழ்நிலை தமிழ் மாகாண சபைக்கு நிட்சயம் அமைந்துவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**C. அசரகால நிலை சட்ட அதிகாரங்கள்**

பிரிவு 154 J ஜனாதிபதி ஒருவருக்கு அவசரகால நிலையினைப் பிரகடனம் செய்யும் அதிகாரத்தினை அளிக்கின்றது. இதன்கீழ் ஜனாதிபதி ஒருவர் அத்தியாவசிய சேவைகள் சீர்குலையும் என்ற எதிர்பார்ப்புடனேயே அவசரகால நிலைமையினைப் பிரகடனம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதிக்கு அவசரகால நிலையினை பிரகடனப்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எல்லையற்று இருப்பதன் காரணமாக உண்மையான கருத்துள்ள அதிகாரப் பகிர்வின் சாத்தியக்கூறுகள் எல்லாம் முனை மழுங்கடிக்கப்பட்டுள்ளன. சிங்கள அரசியல்வாதிகளில் ஒருவராக அமையப்போகும், வேட்பாளர்கள் சகலரும் அவர்களில் ஒருவராக தெரிவு செய்ய வாய்ப்புள்ள அரசியல்வாதியான ஜனாதிபதி ஒருவரும் ஏற்கனவே சுய நிர்ணய உரிமை கொண்ட தமிழ் மாகாணம் ஒன்று நிலை பெறுவதில் தங்களுக்கு உள்ள அதிருப்தியினை வெளிக் காட்டி உள்ளமையால், அவசரகால நிலை பிரகடனம் என்பது தமிழ் மாகாணம் ஒன்றின் நிர்வாகத்தினை அவரது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அவருக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ள சுலபமான நடவடிக்கையாகும்.

## (11) மத்திய, மாகாண, நிதி தொடர்பான உறவு நிலை

13-ம் திருத்தச் சட்டத்தின் பிரிவு 154 R (1) மாகாணசபைகளின் நிதி சம்மந்தமான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும், நிதி ஆணைக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மாகாணங்கள் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்பட்டதைக் கருத்திற்கெடுத்து இவ் ஆணைக் குழுவில் தமிழர் பிரதிநிதிகள் தேவைக்கேற்ப வீதத்தில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

## (12) மத்திய, மாகாண, இருசாரார் பட்டியலும், அதிகாரப் பங்கீடும்

காணி, கல்வி, சட்டம் ஒழுங்கு பேணல் என்பது தொடர்பான அதிகாரப் பங்களிப்பு என்பன ஏற்கனவே பிரிவுகள் 6, 7, 8-ல் விபரிக்கப்பட்டுள்ளன. அதே போன்றே என்னும் ஓர் முக்கிய அம்சமான திட்ட அமுலாக்கல் விடயமும் எவ்வாறு மாகாண சபையிடம் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதனை இதன்கீழ் விபரிப்போம்.

## (13) திட்டமிடல்

சர்ச்சைக்குரியதும் மிக முக்கியமானதுமான விடயங்கள் இரண்டு (1) சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள். (2) திட்ட உருவாக்கமும், நடைமுறையும். இவைகள் தெளிவாக 9-வது நிரலில் அடையாளமிடப்படவும் இல்லை. வரையறை செய்யப்படவுமில்லை. மத்திய அரசுக்குரிய பட்டியலில் முதலிடம் பெறுவது "சகல விசயங்களிலும், நடவடிக்கைகளிலும் ஒரே தேசியக்கொள்கை கொண்டிருத்தல். இது தர்க்க ரீதியாக நோக்கும் இடத்து மத்திய அரசுக்குரிய ஓர் விடயம் எனினும், என்ன என்ன விடயங்கள் தொடர்பில் இக்கொள்கைகள் எனக் குறிப்பிடத்தவறியமை, வேண்டும் என்றே ஓர் கபட நோக்குடனேயே செய்யப்பட்டது எனக் கருதவேண்டியுள்ளது. இவ்வாறு செய்யப்பட்டமை மறைமுகமாக சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும், திட்ட உருவாக்கத்தினையும் நிரந்தரமாக மத்திய அரசுக்குரிய பட்டியலில் வைத்திருக்கும் முயற்சியில் தான் என்பது வெளிப்படை.

சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும், மாகாண அபிருத்திக்கான திட்ட உருவாக்கும் அதிகாரங்களையும் மாகாணசபைக்கு அளிக்காது மத்திய அரசு பட்டியலில் வைத்திருக்கும் முறை ஓர் முறையான அதிகாரப் பகிர்வினை எவ்வகையிலும் உருவாக்கிவிட முடியாது. இத்தகைய முயற்சிகள் அதிகாரப் பகிர்விற்கு எதிர்மறையான விளைவுகளையே உருவாக்கி விடும்.

## (14) மற்றைய விடயங்கள்

### (A) இணைப்பு

13-ம் திருத்தச் சட்டத்தின் பிரிவு 154 (A 3) தொடர்பான ஓர் நிரந்தரமற்ற தன்மையினை, கொள்கையினை அரசு கொண்டிருப்பதனை வெகு துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இலங்கை இந்திய தீர்மானங்களில் சில நிபந்தனைகளின் மேல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அம்சம் ஆதலினால் இதற்கு உருக்கொடுக்கும் வகையில் அனுபந்தம் 8 அரசியல் அமைப்பு நிலையாகத் திருத்தப்படல் வேண்டும்.

### (B) மாகாண மந்திரிசபையின் அளவு

மாகாண மந்திரி சபைக்கு முதல்மந்திரி உட்பட நாலு அமைச்சர்கள் மட்டுமே இருத்தல் வேண்டும் என்று 13-வது திருத்தச் சட்டம் தேவைப்படுத்துகின்றது. இது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரிவு 2-15ஐ வெளிப்படையாகவே மீறிய ஓர் செயலாகும். ஏன் எனில் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களில் இவ்விடயம் மிகத் தெளிவாக ஆகக் குறைந்தளவு மந்திரிமார்கள் எண்ணிக்கை ஆறாகவும், கூடியது மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3

(2-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையகத் தமிழர் எதிர்காலம் - ஒரு பகுப்பாய்வு

(கடந்த இதழ் 31-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யலையும் வீட்டு வேலைகளையும் கவனித்துவிட்டு தேயிலைத் தோட்டங்களில் கடமையாற்றவும் செல்லவேண்டியிருக்கிறது. குடும்பம் முழுவதும் உழைத்தால் தான் காலம் தள்ள முடியும் என்ற நிலை அங்கிருப்பதனால் மிகவும் இளவயதுப் பிள்ளைகள் தம்பி தங்கைகளைப் பராமரிக்கவும், சமையல் செய்யவும் பழகிக்கொள்கின்றனர். பின்னர் ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் தோட்ட வேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் அவர்களது ஆரம்பக் கல்வி கூடத் தடைப்பட்டு விடுகிறது. ஆரம்பகாலத்தில் பிள்ளைகள் தமக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதற்காகவே பெற்றோர் தம் பிள்ளைகளை தாம் வேலைக்குச் செல்லும் போது பாடசாலைக்கு அனுப்பிவைத்தனர். இதனால் அர்த்தமுள்ள ஆரம்பக் கல்வியைச் சிறார்கள் பெறுவதில்லை பொழுதை ஓட்டுவதற்காகவே இவர்கள் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளை விடத் தோட்டச் சிறார்களின் கல்வித் தரம் மிகவும் குறைவு. உதாரணமாக க. பொ. த. (சா. த.) வரை கல்வி பயின்றவர்கள் மலையகத்தில் 1970-ல் 1.3% இனரே ஆகும். இதற்கு மேலே கூறிய காரணத்துடன் தோட்டப் பாடசாலைகளில் தேவையான வசதிகள் இன்மையும் ஆசிரியர் பற்றாக்குறையும் சேர்ந்து கொள்கின்றன. இவ் வசதிக் குறைவுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். அத்துடன் கல்வி கற்கும் வசதி செய்து கொடுத்தால் மாத்திரம் போதாது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளது போன்ற குழந்தைகள் பராமரிப்புக் கூடங்கள் (இதில் பாலர் பாடசாலைகளும் அடங்கவேண்டும்) செயல்படுத்தப்பட வேண்டும். அத்துடன் உயர் கல்வியைத் தொடர்வதற்காக, பொருளாதார ரீதியாகக் கஷ்டப்படும் திறமைசாலிகளான மாணவர்களுக்கு அதிகளவில் புலமைப் பரிசில்கள், இதர வசதிகள் என்பன வழங்கவேண்டும். இக் கல்வியறிவு ஊட்டப்பட்ட இளைஞர் சமுதாயம் ஒரு மாற்றத்தை மலையகத்தில் நிச்சயம் கொண்டுவரும்.

மலையகத்தில் சுகாதார வசதிகள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளது. இதனால் மாற்றக்கூடிய நோய்கள் கூட கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்திவிடுகின்றன. குழந்தை இறப்பு வீதம், கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் என்பன அதிகமாக உள்ளது. போஷாக்கற்ற குழந்தைகள் சுகாதாரமற்ற முறையில் வளர்கின்றன. இம்மக்களுக்கு சுகாதார அறிவு ஊட்டப்படுவதுடன் மருத்துவமனை வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இவர்களது வீட்டு வசதியோ சொல்லுந்தரமன்று. வரிசை வரிசையாக உள்ள லயன்களில் ஒரு குடும்பம் முழுவதும் ஒரு அறையிலேயே சகல அன்றாடக் கருமங்களையும் செய்யவேண்டியுள்ளது. பெற்றோரும், பிள்ளைகளும் இச்சிறு இடத்திலேயே தமது வாழ்க்கையை நகர்த்தவேண்டி இருப்பதால் பல சங்கடங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. பன்றித் தொழுவங்களைப் போன்ற இந்த 10'×12' லயக் காம்பறாக்கள் தகர்க்கப்பட்டு குறைந்தபட்ச வசதிகளையாவது கொண்ட வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவ்வகையில் சிறீலங்காவின் பிரதமர் நான்கு வருடங்களுக்கு முன்பு எண்பதினாயிரம் வீடுகளைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தரப்போவதாக வழங்கிய வெற்று வாக்குறுதியை நினைவு கூரவேண்டியுள்ளது. இப்பகுதிச் சிங்கள மக்களுக்கு பெருமளவு வீடுகளைக் கட்டிக் கொடுத்து வரும் அரசு மக்களின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும்.

மதுப்பாவனையும் மூடநம்பிக்கைகளும் இம்மக்களின் வாழ்க்கையை ஒருபுறம் சூறையாடுகின்றன். மறுபுறத்தில் அரசு மலையக இளைஞர்களுள் பலரைப் பயங்கரவாதிகள் என்றுகூறி கைதுசெய்து கொடுமைப்படுத்தி வருகிறது. மலையகத்தின் மறுமலர்ச்சிக்காக மாபெரும் புதிய தலைமுறையின் எழுச்சியை இவ்வாறான அடக்குமுறைகளினால் வீழ்த்தி விட முடியாது. மலையகத்தில் மாற்றத்தை வேண்டிப் போராட முற்படுபவர்கள், தமது உரிமைகளுக்காக அங்

www.tamilarangam.net



குள்ள நேர்மையான முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் இணைந்து போராடுவதற்கு எமது தார்மீக ஆதரவை அளிப்போம். தமிழீழம் தனது இறைமையை மீட்ட பின், மலையகத்திலேயே வசிக்க விரும்பும் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், தமது உரிமைகளைக் காத்துக்கொள்வதற்கும் இது ஒரு முன்னோடியாக இருக்கும்.

இனி தமிழீழப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்த, இடம் பெயர விரும்பும் மலையகத் தமிழ்ச் சகோதரர்களுக்கு நாம் நடைமுறையில் என்ன திட்டங்களை உருவாக்கலாம் என்பதைக் கவனிப்போம். தமிழீழத்திற்கு இடம் பெயரும் மலையகத் தமிழ் மக்களுக்கு ஏனையோருக்குள்ளது போல் முழுக் குடியுரிமை, வாக்குரிமை உள்ளடங்கிய சகல ஜனநாயக உரிமைகள் அளிக்கப்பட்டு கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பனவற்றில் மேலும் வளர்ச்சி காண ஊக்கம் அளிக்கப்படவேண்டும்.

இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இலங்கையில் மலையக மக்களிடையே தான் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவாக உள்ளது. எனவே இவர்கள் அனைவருக்கும் குறைந்தபட்சம் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் அவசியமாகும். தமிழீழ விடுதலைக்கான பயணத்தில் சகல பிரதேசங்களிலும் இவ்வாறான மக்களுக்கு எழுத்தறிவை மேம்படுத்துவதற்காக தொண்டர் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். நிகரகுவாவின் விடுதலையின் பின்னர் அங்குள்ள புரட்சிகர அரசு மாணவர், இளைஞர்களைக் கொண்ட தொண்டர்களைக் கிராமம்தோறும் அனுப்பி மிகக் குறுகிய காலத்தில் பலருக்கு எழுத்தறிவு ஊட்டுவதில் வெற்றி கண்டது. இவ்வனுபவத்தில் நாமும் பங்குகொள்ள வேண்டும். முதியோர் கல்விக்கு ஊக்கம் அளிக்கப்படும் அதே சமயத்தில் இவர்கள் குடியமர்த்தப்படும் இடங்களில் உள்ள பாடசாலைகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும். முன்னைய காலத்தில் மலையகத்திற்குப் படிப்பிக்கச் சென்ற வடபகுதி ஆசிரியர்களுள் சிலர் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதில் அக்கறை காட்டாதது மாத்திரமல்லாது அவர்களைக் கொண்டு தமது சொந்த அலுவல்களைச் செய்வித்தனர். இவை அம்மக்களின் மனதில் வடபகுதித் தமிழ் மக்களைப் பற்றிய இலகுவில் மாற்ற முடியாததோர் வடுவை ஏற்படுத்தியுள்ளது. இவற்றை நீக்கவேண்டுமெனில் உணர்வுபூர்வமாக அம்மக்களின் நலனில் அக்கறையுடையவர்களை ஆசிரியர்களாக அமர்த்தவேண்டும். அத்துடன் ஓரளவு கல்வி பயின்ற மலையக இளைஞர் சமுதாயத்திலிருந்தே கூடுதலாக ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படல் சிறந்ததாகும்.

திட்டமிட்ட அடிப்படையில் புதிய விவசாயக் குடியேற்றங்களும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களும் தமிழீழத்தில் உருவாகும்போது மலையக மக்களுக்கு சிறப்பான ஓர் பங்கு அளிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு கூட்டுப்பண்ணைகள் ஏற்படுத்தப்படுவதுடன் விவசாய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படவும் வேண்டும். இல்லாவிடில் 77-ம் ஆண்டுக் கலவரங்களின் பின்னர் குடியேறிய மலையக மக்களை இங்குள்ள நிலப்பிரபுக்கள் கூலி அடிப்படையில் உழைப்பைச் சுரண்டியது போன்ற நிலைமை மீண்டும் ஏற்பட வழி அமைந்துவிடும்.

மலையக மக்களின் வருமானத்தின் கணிசமான பகுதியை மதுப்பாவனை உறிஞ்சிவிடுகின்றது. தமிழீழத்தில் குடியேறிய இம்மக்களில் ஒரு பகுதியினர் வடிசாராயத்தில் தமது வருமானத்தை விரயமாக்கிவிடுகின்றனர். சில குடும்பங்களில் அனைத்து உறுப்பினர்களுமே இப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளதை இப்பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது. இதனைத் தடுப்பதற்கு இம்மக்களிடையே தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் நாம் ஏற்கனவே கூறியவாறு சுகாதார அறிவை மேம்படுத்துவதுடன் சுகாதார சேவைகள் பரவலாக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கின் தட்பவெப்ப நிலைகளுக்குப் பழக்கப்படாதவர்களாகவும் பெருந்தோட்ட வேலைகளை மாத்திரமே செய்யத் தெரிந்தவர்களாகவும் உள்ள மலையக மக்களை விவசாயம், கைத்தொழில் போன்ற தொழில்களில் ஈடுபடுத்துவதில் சிக்கல்கள் ஏற்படலாம். இவர்களின் வேலை செய்யும் ஆற்றலைப் புதிய துறைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதில் ஏற்படும் பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பதென்பது நடைமுறையினூடாக ஆராயப்பட வேண்டும்.

இம்மக்களின் கலாச்சார அம்சங்களில் - குறிப்பாக பொய்க்கால் குதிரை, நாட்டுப்பாடல், காவடியாட்டம், கரகாட்டம், கூத்து போன்றவற்றை-கவனம் செலுத்தி வளர்க்கவேண்டும். தமிழீழத்தின் கலாச்சார மையம் ஒன்று உருவாக்கப்பட்டு பூர்வீகத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள், ஆகியோரின் கலாச்சாரங்களை அவற்றின் தனித்துவத்தைச் சிதைக்காவண்ணம் ஒருங்கிணைக்கவேண்டும். ஒன்றினது கலாச்சாரத்தை மற்றையது விழுங்கிவிடக்கூடியதாக அமையக்கூடாது. தமிழீழத் தேசிய

www.tamilarangam.net



உங்கள் நிலைமையும், குடும்பத்தின் நிலையும் எனக்கு தெரியும் தானே. எங்களை நினைத்து அதிகம் மனதை கவலைப்பட வைக்க வேண்டாம்.

தோட்ட வேலை தொடங்கியாகி விட்டது ஒருவாறு, கொத்தி, புரட்டி, மண்ணைப் பதப்படுத்தி, சீர்படுத்தியாகி விட்டது. புகையிலை செய்கை இம்முறை காலம் தவறிவிட்டது. அதனால் வேறு சிறு பயிர்கள் செய்ய எண்ணியுள்ளோம். அப்பா என்னை தனியாக விடுவதில்லை. உடன்கூட வருவார். தம்பியை வீட்டில் நிற்க வைத்துள்ளோம். பெண்களோடு உதவியாக இருக்கச் சொல்லி.

இரட்டைப் பின்னல் ''போட்ட'' பெண்களெல்லாம் இப்போது பின்னல் அப்படி விடுவதில்லை. எல்லோருமே கல்யாணமான பெண்களைப்போல ''குங்குமப் பொட்டு'' பெரிதாக நெற்றியில் வைத்துள்ளார்கள்.

இரட்டைப் பின்னல் போட்ட பெண்களும் ''அவர்களோடு'' சண்டை போட்டனராம். அதனால் இரட்டைப் பின்னல் விட்ட பெண்களை விசாரணைக்கு கொண்டு போகிறார்கள். இதனால் வீட்டில் எவர்தான் நிம்மதியாக இருக்க முடிகிறது? தோட்டத்தில் கூட நிம்மதியாக நின்று வேலை செய்ய முடிவதில்லை. வீட்டில் என்ன மாதிரி இருக்கிறார்களோ என யோசனை வந்து விடுகிறது.

தம்பியின் படிப்பு தொடராமல் உள்ளது. அம்மா அவனை பள்ளிக்கு போவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் தான் அவன் வீட்டில் இருக்கின்றான். அவனும் குழம்பியவனாகவே இருக்கின்றான். சில நேரங்களில் தனியாக இருந்து யோசித்தபடி உள்ளான்.

உமக்கு அவனைப்பற்றி தெரியும்தானே? என்னைப்போல் அல்லாமல், அவன் உலகத்தைப் பற்றி கன விஷயம் அறிந்து வைத்திருக்கின்றான். பலமுறை நீர் எமக்குக் கூறிஇருக்கிறீர். அதுதான் எனக்கு யோசனையாக உள்ளது.

அப்பாவுக்கு முன்பு போல, உடம்பு தொடர்ந்து தோட்டத்தில் வேலை செய்வதற்கு இடம் கொடுக்கவில்லை. அடிக்கடி உடம்பு வலிப்பதாகக் கூறி ஓய்வெடுத்து விடுகிறார். அவருக்கும் வயது அதிகமாகிவிட்டது தானே? அவரும் எவ்வளவு காலம் தான் உடம்பை வருத்துவது?

தோட்ட வேலை முன்பை விட அதிகமாகிவிட்டது அப்பாவின் உழைப்பும் இப்போது என்னுடன் சேர்ந்து விட்டது, சகோதரங்களுக்கு நல்லவழியை ஏற்படுத்திக் கொடுப்பது எல்லாமே என் கையிலேதான் இருக்கின்றது. அதற்கு இந்த நிலைமைகள், சண்டைகள் நீங்கி எப்போது ஒரு அமைதியான நிலைமை தோன்றும்?

இது தொடங்கி எவ்வளவு காலமாகிவிட்டது? முன்பு போல தோட்டத்திலே மனதை விட்டு உழைக்கும் நாள் வராதா?

ஒன்றைக் கூற மறந்துவிட்டேன்.

நேரில் வந்து சரணடைபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமென அறிவித்தார்கள். இதைத் தொடர்ந்து பெடியன்களுக்கு ''உதவியாளனாக இருந்த ஒரு பெடியனை, ஊர்ச்சனங்கள் அவனை வற்புறுத்தி ''அவர்களிட்ட'' போகவிட்டு..

கடைசியில் சில நாட்கள் கழித்து அவனை பிணமாக வீட்டுக்கு கொண்டு வந்து கொடுத்தார்கள் இவையெல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கின்றோம்? இத்துடன் முடிப்பது.

தங்கள் அன்புள்ள,
சபாநாதன்.

01-01-89

அன்புள்ள அண்ணனுக்கு வணக்கம். தோட்ட வேலைக்கு ஓடித் திரிவதால் உங்களுக்கு கடிதம் போட தாமதமாகிவிட்டது. கத்தரி, வெண்டி, வெங்காயம் என்பன எங்கட தோட்டத்தில்விளைந்துள்ளன. அவைகளைப் பார்க்கும்போது இந்த கஸ்டமான நேரத்திலும் மனம் சந்தோஷமடைகின்றது. இவைகளை விற்பதன் மூலம் அன்றாடச் செலவுகளை சமாளிக்கக் கூடியதாக உள்ளது.

பழைய சந்தைக் கட்டிடத்தில் ''அவர்கள்'' காம்ப் அடித்து உள்ளதனால் ஊர் வைரவர் கோயில் வீதியிலேயே சந்தை கூடுகின்றது. தம்பி இடைக்கிடை பள்ளிக்கு போய் வருவான். ஒழுங்காக இல்லை. அம்மா இன்னமும் நன்றாகக் குணமடையவில்லை. அப்பாவும் முன்பு சொன்னது போல் உடம்பு வலியினால் அடிக்கடி அவதிப்படுகின்றார்.

அவரையும் ஒரு பரியாரியிடம் காட்ட வேண்டுமென எண்ணியுள்ளேன். எல்லாவற்றுக்கும் கையில் கொஞ்சம் பணம் சேர வேண்டும். அதற்கு தோட்டத்தைத்தான் நான் நம்பியுள்ளேன். இன்னமும் நிலைமை சீராகவில்லை. தினமும் எங்கோ ஓர் மூலையில் சண்டை நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

அடிக்கடி ''செக்கிங்'' என்று சொல்லிக் கொண்டு வந்து எல்லா ''மட்டத்தினருக்கும்'' நன்றாக அடி போடுகின்றார்கள். வீடுகளில்உள்ள தென்னை மரங்களில் பூக்களைவிட்டு மற்றவற்றையெல்லாம் பறித்து விட்டனர். கோழிகளெல்லாம் இறைச்சிக்காக பிடித்தாகிவிட்டது.

www.tamilarangam.net



எங்கு போனாலும் "அடையான அட்டை" கொண்டு போகின்றோம். அது இல்லா விட்டால் 'அவர்களோடு' போக வேண்டியதுதான். நீர் வேலை செய்யும் நாட்டில் இங்கே நடக்கும் சம்பவங்கள் பற்றி செய்தி வருகின்றதா? இன்னமும் மனதில் ஒரு நம்பிக்கையில் காலம் போகின்றது.

நான் கடிதம் போடாவிட்டாலும் நீர் தவறாமல் போடவும். வரும்போதாவது நிலைமை சீராக சமாதானமடைந்து இருக்குமென இறைவன் மேல் நம்பிக்கை வைக்கிறேன். உங்கள் பதிலை உடன் எதிர்பார்க்கின்றேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
சபாநாதன்

கடிதங்களை வாசித்து முடிக்க மனம் களைப்படைந்து விடுகின்றது. வீட்டிலிருந்தும் சபாநாதனிடமிருந்தும் வந்த கடிதங்களை மொத்தமாகப் பார்த்தால்......

எல்லாரும் எழுதியவற்றைப் பார்க்கும்போது எனக்கு அறிந்தவரெல்லாம் உயிரோடு இல்லையெனத் தெரிகின்றது. நண்பன் எழுதியதுபோல, நான் ஊர் திரும்பும்போது எமது பூமி மேலும் இரத்தங்களினால் சிவந்திருக்குமெனத் தெரிகின்றது.

மனம் ஒரு நிலையில் இல்லாமல் குழம்பி ...குழம்பி....இறுதியில் மேசையில் சாய்ந்து......

கதவு பலமாக தட்டும் ஓசை கேட்டு விழித்தேன். அப்பாடா எவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன். விரைவாகபோய் கதவினைத் திறந்தேன் "வாச்மென்" கடிதத்தினைத் தந்தார். அதனை வாங்கி அவசரமாக பிரித்துப் படிக்கத் தொடங்கினேன்..................உனக்கொரு சோக விடயம் சின்னம்மாவின் மூத்த மகன் சபாநாதன் 06-01-89இல் தோட்டத்தில் வைத்து, "ரோந்து" போனவர்களால் சுடப்பட்டு மரணமடைந்தார்.. ......

அன்றைய வானொலி செய்தியில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டாரென செய்தி வந்திருக்கும்.

★




நன்றி : 30-1-89 ஐலண்ட்

## தமிழீழத்தில் தேர்தல்

கொலைக்களமாக மயான பூமியாக இருக்கும் தமிழீழ மண்ணில் அமைதியற்றயுத்த சூழ்நிலையில் மக்கள் விருப்பத்துக்கு மாறாக இலங்கை-இந்திய அரசுகளின் ஆதரவுடன் துப்பாக்கி முனையில் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வாழ்க ஜனநாயகம்!

www.tamilarangam.net

# நீங்கள் திரும்பி வரும்போது......

(உண்மைக்கதை)

எழுதியவர் :- அரசகேசரி.

வீட்டிலிருந்து கடிதம் வந்திருந்தாலும் சின்னம்மாவின் வீட்டிலிருந்து கடிதம் வரவில்லை. அங்கிருந்து கடிதம் வந்து ஒரு மாதத்திற்குமேல் ஆகின்றது. மனம் பொறுமையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. வரும்போது கூட சின்னம்மா சுகமில்லாமல் இருந்தார்.

சின்னம்மா குடும்பமும் மற்றவர்கள் போல் கோயில்களில் தஞ்சம் அடைந்ததிலிருந்து, சின்னம்மாவுக்கு நோய் பிடித்துக் கொண்டது.

சின்னம்மாவின் சுகவீனம் தான், மகன் சபாநாதனிடமிருந்து கடிதம் வருவதற்கு தாமதப் படுத்துகின்றதோ?

பாவம் அவன் தானே மூத்த பொடியன். அவனுக்கு பின் வந்த ஐந்து பெண் சகோதரங்களும் ஒரு தம்பியும் அவனைத் தானே நம்பி உள்ளனர்:

மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. மறுபடியும் சின்னம்மா குடும்பத்தைப் பற்றியே சிந்திக்க தூண்டியது. சிந்தனை ஓட்டத்தை நிறுத்துவதற்கும், மனம் ஆறுதலடைவதற்கும் ஏதோ ஒன்று செய்தாக வேண்டும்போல் இருந்தது. கைகள் சும்மா இராமல் சின்னம்மா வீட்டிலிருந்து வந்த பழைய கடிதங்களை எடுத்துப்பிரித்தது.

.........

06.08.88

அன்புள்ள அண்ணனுக்கு உங்கள் கடிதம் இரு கிழமைகளின் பின்னரே இங்கு வந்து சேர்ந்தது. யாவையும் அறிந்தேன். கண்ணுக்குத் தெரியாத இடத்தில் இருந்து, இங்கு நடக்கும் அமளிகள் தெரியாமல் இருந்தாலும், மனம் சந்தோஷமில்லாமல் இருப்பதாக எழுதி இருந்தீர்கள்.

என்னென்று மனம் நிம்மதியாக இருக்கும்? இங்கே ஊரில் எல்லாப் பிரச்சனைகளிலும் வாழ்ந்து பார்த்துத்தானே இருந்தீர்கள். கடிதம் மூலம் வரும் செய்திகளெல்லாம், உங்களுக்கு பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்தும்.

அதனை நினைத்தால் மனம் எப்படி சந்தோஷமாக இருக்கும்? நீங்கள் தனியாக இருந்து மனதைக் குழப்பிக் கொள்ள



www.tamilarangam.net



வேண்டாம். அம்மாவுக்கு இன்னமும் உடம்பு சீராக வரவில்லை. கல்வியங் காட்டில்தான் ஒரு பரியாரியிடம் காட்டி வருகின்றோம்.

சண்டை நேரத்தில் தினமும் கோயிலுக்கு ஓடி, ஓடி, ஒழுங்கில்லாத சாப்பாட்டினால் உடல் நன்றாகவே பாதிக்கப்பட்டு விட்டதாம். பழைய நிலைக்குக் கொண்டுவருவதென்றால் தொடர்ந்து வைத்தியம் செய்ய வேண்டி இருக்கின்றது.

தோட்ட வேலை தொடங்குவது, பெரிய கஸ்டமாக உள்ளது, சனங்கள் தத்தம் இருப்பிடங்களுக்கு வந்து சேர்ந்தாலும், ஊரின் நிலமை இன்னமும் சீராகவில்லை. பொழுதுபட்டால் வெளியில் போகமுடியாது, ஊரடங்குச் சட்டம் மாலை ஆறு மணி தொடங்கி அதிகாலை வரை இருக்தும்.

இரவில் ''அவர்கள்'' காம்பிலிருந்து (முகாமிலிருந்து) வெளிக்கிட்டு, ஊர் சந்து பொந்து, ஒன்றும் அச்சமில்லாமல் திரிவாரகள். நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டு இருக்கும். அப்படிப் போகும்போது வீட்டுப் படலையை பலமாகத் தட்டிவிட்டுச் செல்வார்கள்.

நாங்கள் ஒருவரையொருவர் பார்த்து முழித்தபடி பேசாமல் இருப்போம். நிம்மதியாக நித்திரை கொண்டு பல நாட்கள் ஆகின்றது. இங்கு சண்டை வர முன்னர் நட்ட பயிர்கள் எல்லாம் அழித்து போய்விட்டன, இரு நூறு வாழைகளுக்கு மேல் தரை மட்டமாக உள்ளன. சிதைந்த வாழைக் குலைகளையெல்லாம் வெட்டிக் கொண்டு போய் விட்டார்கள்.

கையில் ''இருப்பு'' இல்லை, தோட்ட வேலை தொடங்குவதற்கு மனம் தயாராக இல்லை. தோட்டங்களெல்லாம் கவனிக்கத் தவறியதால் ஒரே புல்லுக் காடாக இருக்கிறது.

எங்கள் தோட்டத்திற்குப் போகும் வழியில், சந்தியிலுள்ள அரிசி மில்லில் சண்டை தொடங்கிய அன்றே ஒரு ''காம்ப்'' போட்டுவிட்டார்கள். இரவில் வீட்டில் தங்கியிருந்த முருகனையும், மகனையும் பிடித்துக் கொண்டு போய் இன்னமும் விடவில்லை. அவர்கள் ''பொடியன்களுக்கு'' உதவியாக இருந்தவர்களாம்.

உமக்கு தெரியும்தானே முருகனையும், மகனையும் பாவம். அவனும் என்னைப்போல பகல் முழுக்க தோட்டத்தில் வேலை செய்து போட்டு, இடைக்கிடைதான் தகப்பனோட போய்ப் படுக்கிறவன்.

அவன்ரை நிலைமையை பார்த்தீரே? அவன் என்ன குற்றம் செய்தான்? இடையில ஒருநாள் அவன்ரை வீட்டுக்காரர் போய் பார்த்தவை. அவனுக்கு நல்ல அடியாம், எழும்ப முடியாமல் இருக்கிறானாம். தகப்பனுக்கும் நல்ல அடியாம். இதைக் கேள்விப்பட்ட பிறகு தோட்டத்திற்குப் போக வீட்டில் என்னையும், தம்பியையும் விடவில்லை.

எத்தனை நாளைக்குத்தான் போகாமல் இருப்பது? ஒருநாள் போய் தோட்டத்து நிலைமையை பார்த்துவிட்டு வந்த பிறகு இன்னமும் போகவில்லை.

உமக்கு பிள்ளையார் கோவிலடி வாசிக சாலை தெரியும் தானே? அங்க ''காம்ப்'' இலிருந்து வந்த கொஞ்சப் பேர் தங்கியுள்ளனர். அவர்கள் அடிக்கடி விசாரணை என்று சொல்லி, கன பொடியன்களை பிடித்துக் கொண்டு போவார்கள்.

ஒருமுறை என்னையும், தம்பியையும், பிடித்துக் கொண்டு போக வெளிக்கிட.......அம்மாவோடு சகோதரங்களும்சேர்ந்து அழத் தொடங்க, கொஞ்ச நேரம் தம்பியின்ரையும், என்ரையும், உள்ளங்கைகளையும் முழங்கால்களையும், தடவித் தடவி பார்த்துவிட்டு ''சொல்லுங்கோடா, பயிற்சிக்கு போனனீங்களே?......'' என வெருட்டினார்கள், அம்மா பாவம் அழுது கத்தினார் ''ஐயோ கடவுளே, அதுகள் விடிஞ்சா, பொழுது பட்டா, தோட்டத்தில நிண்டு, வெய்யிலத்துக்குள்ள காய்ந்து போட்டு வந்து ஊரில என்ன நடக்கிறதென்று தெரியாமல் படுத்து எழும்புறதுகள்........''

என அவ பெரிதாக சத்தம் போட, பிறகு என்னமோ தெரியாது, பேசாமல் போய்விட்டார்கள். இப்படி எத்தனை நாளைக்கு எங்களைப் பாதுகாக்க வீட்டுக்காரரோடு இருக்கிறது?

அப்பா இப்போது தெரிந்த இடங்களில காசு மாறுவதற்கு போய் வாரார். தோட்ட வேலை தொடங்குவதற்கு. முன்பு பட்ட கடனும் கொடுக்காமல் உள்ளது. அம்மாவுக்கும் வைத்தியச் செலவுக்கு பணம் அதிகமாக தேவைப்படுகின்றது.

இதைவிட வீட்டில் பெண் சகோதரங்கள் எல்லோருமே ''வயதுக்கு'' வந்து இருக்கிறார்கள் வருமானம் இல்லாமல் சீவியப்பாட்டை என்னென்று கொண்டு போவது? ஏதோ மன ஆறுதலுக்காக, இதனை எழுத வேண்டி இருந்தது. நாங்கள் யாருக்கும் தீங்கு இழைக்கவில்லை. இத்துடன் கடிதத்தினை முடிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
**சபாநாதன்**

*12-10-88*

அண்ணனுக்கு வணக்கம் சென்ற கடிதத்தில் என் குடும்ப நிலையைச் சொல்லிக் குழப்பி விட்டேன் போல் தெரிகின்றது.

www.tamilarangam.net



கலாச்சாரம் என்பது இவ்வாறு தான் உருவாக முடியும்.

தமிழீழத்தில் குடியேறிய மலையக மக்களுக்கும் தமிழீழத்தின் பூர்வீக மக்களுக்குமிடையில் பல இடங்களில் கலப்பு மணம் நடைபெறுகின்றது. இவை மேலும் ஸ்தாபன ரீதியாக ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் இருபகுதி மக்களுக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வும் நல்லெண்ணமும் ஏற்படும்.

தமிழீழப் போராட்டத்தில் வடக்குக் கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் மலையக இளைஞர்கள் பலர் தமது இரத்தத்தைச் சிந்தியுள்ளனர். இவர்கள் சிந்திய இரத்தத்தை அர்த்தமுள்ளதாக்க வேண்டிய பொறுப்பு தமிழீழத்திலுள்ள அனைத்துப் பிரஜைகளினதும் கடமையாகும். மலையக மக்கள் சுரண்டலில் இருந்தும் அடக்குமுறைகளில் இருந்தும் வெளியே வருவதற்கு அனைவரும் தம்மாலியன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் சிந்தும் இரத்தமும் மலையக மக்களின் வியர்வையும் கண்ணீரும் இணைந்து நாளை ஒரு புதிய வரலாறு உதயமாகும்.

**முற்றும்**

★★★

# விடுதலைப் புலிகளின் பெருமை சிங்களவர்களுக்குத் தெரிகிறது!

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட திருமதி பண்டாரநாயகா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி - தேர்தல் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்திய சேதி நாளேடுகளில் வெளியாகியது.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது உரை நிகழ்த்திய பிரேமதாசா கூட ''நான் ஆட்சிக்கு வந்ததும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தைத் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்ப்பேன்'' என்றுதான் கூறினாராம்.

சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலில் சோசலிச கூட்டணி வேட்பாளராக நின்ற ஓசி அபயகுணசேகரா திருவனந்தபுரத்துக்கு அண்மையில் வந்திருந்தவர் 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு (1-1-1989) ஒரு பேட்டி அளித்திருக்கிறார். அந்தப் பேட்டியில் அவர் சொல்கிறார்:—

''விடுதலைப் புலிகள் விடுதலைப் போராளிகளே - அவர்கள் பெரும் தியாகம் புரிந்தவர்கள்.''

ஜனாதிபதி தேர்தலில் ஓசி அபய குணசேகராவை ஆதரித்த ஈ.பி, ஆர். எல். எப். காரர்கள் ஓசியின் 'இந்து' பேட்டியைப் படித்து வயிற்றெரிச்சல் அடையப் போகிறார்கள் என்கிறார் ஒரு இனமானமுள்ள தமிழர்.

www.tamilarangam.net

## தமிழர் "விடுதலை"க் கூட்டணி வைத்திருப்பது

# தேர்தல் அறிக்கை அல்ல - அடிமைச் சாசனம்

□

1977-ல் **விடுதலைச் சாசனமாக** தேர்தல் அறிக்கையை மக்கள்முன் வைத்த தமிழர் ''விடுதலைக்'' கூட்டணியினர் 12 ஆண்டுகள் கழித்து 1989-ல் மக்கள் முன் வைத்திருக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் **அடிமைச் சாசனமாக** அமைந்திருக்கிறது.

தமிழீழ விடுதலையை வென்றெடுத்து தமிழீழத்தை அமைப்பதற்கு தமிழீழ மக்களிடம் விடுதலைச் சாசனத்தை முன் வைத்து அங்கீகாரம் பெற்ற தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினர் அந்த விடுதலைச் சாசனத்தை இன எதிரியிடம் அடகு வைத்துவிட்டு, மாற்றானிடம் மண்டியிட்டு விட்டு 12 ஆண்டுகள் கழித்து மாற்றானின் படைகளையும், அதிகாரத்தையும் நிலைநிறுத்தி அதில் தமக்கு பதவிகளைப் பெறுவதற்கான அடிமைச் சாசனம் ஒன்றைத் தயாரித்து தமிழீழ மக்கள் முன் வைத்திருக்கின்றனர்.

1977-ல் பாராளுமன்றத் தேர்தலுக்காக தமிழர் ''விடுதலைக்'' கூட்டணியினர் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில்,

''1977-ல் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலை தமிழ் மக்கள் தங்களுக்கு **விடுதலையா ? தொடர்ந்தும் அடிமைத்தனமா ?** என்பதை முடிவெடுக்கும் தேர்தலாகவும், ''நம் முன்னோர் ஆண்ட மண்ணை நாம் மீண்டும் ஆளுவோம் (சிங்கள) ஆட்சி பீடமே தமிழீழத்தை விட்டு வெளியேறு'' என்ற தமிழ் தேசிய இனத்தின் முடிவை (சிங்கள) ஆட்சிபீடத்துக்கு எடுத்துக்கூறும் வாக்கெடுப்பாகவும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சமதர்ம தமிழீழக் குடியரசை நிறுவுவதற்கு தமிழர் ''விடுதலைக்'' கூட்டணிக்கு அனுமதி தரும் சர்வஜன வாக்கெடுப்பாகவே தமிழ் தேசிய இனம் பயன்படுத்த வேண்டும்.''

என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழீழ மக்கள் அத்தேர்தலை தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாகவே கருதி தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினரை வெற்றிபெற வைத்தனர்.

ஆனால் தமிழீழத்துக்காக போராட மக்கள் ஆணையைப் பெற்ற தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினர் அதற்காக ஒரு சிறிய போராட்டத்தைக்கூட நடத்தாதது மட்டுமல்ல, அதன்பின் மாநாட்டுத் தீர்மானங்களிலோ பத்திரிகை அறிக்கைகளிலோகூட தமிழீழத்துக்கு ஆதரவான கருத்துகளைக்கூட எடுத்து வைக்கவில்லை,

அதுமட்டுமல்ல, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற போராளிகளுக்கு எதிராக அறிக்கைகளை விட்டு, எதிரிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு, தமிழீழப் போராட்டத்துக்குத் தடைக்கல்லாகவே இதுவரை இருந்து வந்திருக்கின்றனர்.

தமிழீழத்தில் இருக்க அஞ்சி இவர்கள் இந்திய மண்ணில் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டிருந்தபோது கூட சோ, ஜெயகாந்தன், ம. பொ. சி. போன்ற இழிபிறவிகள் ஈனப் பிறவிகளுக்கு இணையாக இந்திய வானொலியில், தொலைக்காட்சியில் தமிழீழ விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பேட்டி கொடுத்து போராளிகளைக்காட்டிக் கொடுத்து வந்தனர்.

இவர்கள்தான் இன்று தமிழ் மக்களைக் காப்பதாகக் கூறி தமிழீழத்தில் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

**தமிழினத்துக்கு அவர்கள் பெற்றுக் கொடுக்கப்போவது வெற்றியை அல்ல. தொடர்ந்து அடிமைத் தனத்தைத்தான்** என்பது அவர்கள் முன் வைத்திருக்கும் புதிய தேர்தல் அறிக்கை மூலம் நன்கு தெளிவாகிறது. கூட்டணியினரின் புதிய தேர்தல் அறிக்கை,

www.tamilarangam.net



மக்கள் ஆணையைப் பெற்ற ஆறு ஆண்டு காலத்தில் தமிழீழத்துக்கான சிறு போராட்டத்தையோ, போராட்டத்துக்கான ஆயத்தங்களையோ கூடச் செய்யாததால்,

பாராளுமன்றத்தைப் பிரச்சார மேடையாக்குவோம் என்றவர்கள் தமிழீழம் என்னும் வார்த்தையைக்கூட பாராளுமன்றத்தில் பேசுவதைத் தவிர்த்ததால்,

தேசிய மன்றம் அமைப்போம் என்று கூறியவர்கள் தேசிய மன்றம் அமைக்கும் சூழ்நிலை ஏற்படவில்லை என்று குதர்க்க விளக்கங்கூறி குத்துக்கரணம் அடித்ததால்,

அவர்களை 1983-ல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்ற தமிழ் மக்கள் தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம் விரட்டியடித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறு பெற்றதைத் தொடர்ந்து தமிழர் ''விடுதலைக்'' கூட்டணியினருக்கு பாராளுமன்றத்துக்குப் போகமுடியாத பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

அவ்வேளையில், சிங்கள ஆட்சியாளர் பிரிவினைத் தடைச் சட்டத்தை (அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம்) கொண்டுவந்ததும் பிரிவினையைக் கைவிடுவதாகச் சத்தியப்பிரமாணம் எடுத்து பாராளுமன்றம் செல்லமாட்டோம் என்று பத்தினி வேடம் போட்ட தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினர்.

இன்று, அதே பிரிவினைத் தடைச் சட்டம் (அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம்) அகற்றப்படாத நிலையில் தமது பத்தினி வேடத்தைக் கலைத்து அரசியற்சட்டத்தின் ஆறாவது திருத்தச் சட்டத்தை ஏற்று சத்தியப்பிரமாணம் எடுத்துவிட்டு, தந்தை செல்வாவின் தமிழீழக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கு புதிய கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றனர்.

கடந்த ஆறு ஆண்டுகளாக சிங்களப் படைகளாலும், இந்தியப் படைகளாலும் நடத்தப்பட்ட நரவேட்டைகளினால் துன்பதுயரங்களில் மூழ்கியிருந்த தமிழ் மக்களை நினைத்துக்கூடப் பார்க்காது நாட்டைவிட்டு வெளியேறி ஆறு ஆண்டுகாலம் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டவர்கள், இன்று திரும்பி வந்து தமிழினத்தின் தலைமையைத் தரும்படி மக்களிடம் கேட்கின்றனர்.

**அஞ்ஞாதவாசம் மேற்கொண்டுவிட்டு திரும்பி வந்து பெறுவதற்கு தமிழினத்தின் தலைமை என்பது பரம்பரைச் சொத்தல்ல.**

தமிழ் மக்கள் கொடுமையை அனுபவித்த கடந்த ஆறு ஆண்டு காலத்தில் வெளிநாட்டில் இருந்தபடியே தமிழ் மக்களுக்குச் சேவை செய்ததாகக் கரடிவிடும் தமிழர் ''விடுதலை'' கூட்டணியினர், பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன்பின் பாராளுமன்றத்துக்கு வெளியே இருந்து பணி ஆற்ற முடியாது பாராளுமன்றத்துக்கு உள்ளே செல்லத் துடிக்கின்றனர்.

பதவிவெறி பிடித்த இந்தச் சுயநலக் கும்பல் வீரம் பேசிச் சோரம்போய் தமிழினத்துக்குச் செய்த துரோகங்கள் ஒன்று இரண்டல்ல.

- தமது பாராளுமன்றப் பதவியைத் தப்ப வைத்துக்கொள்வதற்காக திருகோணமலை மாவட்டத்தில் ஒரு சிங்களத் தேர்தல் தொகுதியை அமைக்குமாறு தேர்தல் தொகுதி நிர்ணயக் கமிஷன்முன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டது.
- சிங்கள அரசின் தமிழின விரோதப் போக்கை எதிர்த்து தமிழிளைஞர்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கையில், தமிழீழ விடுதலைக்காகப் போராட மக்களின் ஆணையைப்பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றுவிட்டு அங்கு சிங்கள அரசுடன் சேர்ந்து ''இலங்கை ஒரே நாடு. சிங்களவர்களும் தமிழர்களும் நீண்டகாலமாக ஒற்றுமையாக வாழ்கிறோம்'' என்ற வாசகங்களைக்கொண்ட யாசக மனுவில் கையெழுத்திட்டு ஒபேக் எண்ணை வளநாடுகளுக்கு குறைந்த விலையில் எண்ணையைத் தரும்படி விண்ணப்பித்தது,
- தமிழீழத்துக்காகப் போராட மக்கள் ஆணையைப் பெற்றவர்கள், 1978-ல் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட தமிழர்களை அடிமைகளாக்கும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து எதுவித போராட்டத்தையும் நடத்தாதது,
- 1979-ம் ஆண்டு ஜெயவர்த்தனா ஆட்சியில் இன்பம், செல்வம் உட்பட ஏராளமான தமிழிளைஞர்களை காரணமின்றிக் கைது செய்து சித்திரவதை செய்து கொன்றுகுவித்த சிங்களப் போலீசாருக்கு எதிராக கண்டனம்கூடத் தெரிவிக்காது சிங்கள அரசின் பிரதமர் பிரேமதாசாவுடன் சேர்ந்து தமிழ்

www.tamilarangam.net



போராளிகளைக் கண்டித்து கூட்டறிக்கை விடுத்து விடுதலைக்காகப் போராடிய தமிழினைஞர்கள் மீது வீண் பழி சுமத்தியது.

- "ஈழத்தமிழர்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும்." "தமிழீழ விடுதலைக்குப் போராடும் அமைப்புகள் ஒன்றுசேர வேண்டும்" என்று ஒருபுறம் அழைப்பு விடுத்துக்கொண்டு, இரகசியமாக அமிர்த லிங்கத்தின் மகன் தலைமையில் ஆயுதப் படையை அமைத்து அதற்கு வெளிநாடுகளில் பணம் திரட்டியது,
- ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமரசம் பேசவந்த இந்திய அரசிடம் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையான தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தத் தவறியது,
- இந்தியப் பேரரசின் நெருக்குதலுக்கு மத்தியிலும் உறுதியாக நின்று தமிழ் மக்களின் கொள்கைகளை வலியுறுத்தி வந்த புலிகளைக் கண்டித்து பல தடவைகள் இந்தியத் தொலைக் காட்சிக்குப் பேட்டி கொடுத்ததுடன், தொடர்ந்து தமிழீழக் கொள்கைக்கும் போராட்டத்துக்கும் எதிராக பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருப்பது,

இவைபோன்று இன்னும் எண்ணமுடியாத அளவுக்கு தமிழ் மக்களுக்குத் துரோகங்களைச் செய்த தமிழர் "விடுதலை"க் கூட்டணியினர் இன்று தமிழ் மக்கள் முன் மீண்டும் வாக்குக் கோரி வருகின்றனர்.

இவர்களுடன்,

1975-ல் தந்தை செல்வா போட்டியிட்ட காங்கேசன்துறை இடைத்தேர்தலில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது 'இதுதான் நாம் வாக்கு கேட்டு வரும் கடைசித் தேர்தல். இனிமேல் வாக்குக் கேட்டு வரமாட்டோம். கறுப்புக் கோட்டு போட்ட அரசியல்வாதிகளை நம்பாதீர்கள்" என்று அன்று தமிழர் கூட்டணிக்கெதிராகப் பிரச்சாரம் செய்த ஈ. பி, ஆர். எல். எப். ஐச் சேர்ந்த இன்றைய முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும், பத்மநாபாவும் அதே கூட்டணியின் தலைமையின் கீழ், அதே கூட்டணியின் சின்னத்தில் தமது அமைப்பைச் சேர்ந்தவர்களை தேர்தல் களத்தில் இறக்கியிருப்பதன் மூலம் தாம் கொள்கையற்ற பதவி வெறியர்கள் என்பதை மீண்டும் அவர்கள் வெளிக்காட்டியிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு மோசடியான முறையில் பதவிகளைப் பெற்ற ஈ. பி. ஆர். எல். எப். இனர், மாகாணசபைத் தேர்தலில் தம்மோடு இணைந்து போட்டியிட்ட ஈ. என். டி. எல். எப். இனரைக் கைகழுவிவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து பாராளுமன்றத்துக்கான இடங்களுக்கும் தாம் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்த ஈ. பி. ஆர். எல். எப். இனர்,

தமக்கு நன்றி விஸ்வாசம் காட்டிய தமிழர் "விடுதலைக்" கூட்டணியினருக்கும் சில பதவிகளைக் கொடுக்க எண்ணிய இந்திய அரசு பயமுறுத்திப் பணியவைத்ததன் காரணமாக தமிழர் "விடுதலை"க் கூட்டணியின் கீழ், தமிழர் "விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் பதினொரு வேட்பாளர்களை மட்டுமே நிறுத்தியுள்ளனர். இவர்களுடன் ஈ. என். டி. எல். எப். இனரும், டெலோவின் ஒரு பிரிவினரும் ஓரணியாக தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பவாத அணியினர் தாம் நிறுத்தியுள்ள வேட்பாளர்களில் முஸ்லீம்களுக்கு உரிய இடம் கொடுக்காததன் மூலம் முஸ்லீம் மக்கள் இன ரீதியாக தமிழர்களோடு ஒன்று சேர்ந்துவிடக் கூடாது என்று திட்டமிட்டுச் செயற்பட்டுவரும் இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் துணை போயிருக்கின்றனர்.

பதவி வெறி பிடித்த துரோகக் கும்பலின் இந்த நடவடிக்கையினால் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் மீது நம்பிக்கையின்மையை வளர்ப்பதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதன் மூலம் தமிழர் "விடுதலை"க் கூட்டணியினர் முஸ்லீம் ஐக்கிய முன்னணியினருக்கு கொடுத்திருந்த வாக்குறுதியையும் காற்றில் பறக்க விட்டுள்ளனர்.

தமது கடந்தகால வரலாற்றைத் தமிழ் மக்கள் மறந்துவிட்டார்கள் என்று நினைத்து இன்று புதிதாகப் படையெடுத்திருக்கும் இந்தத் துரோகக் கும்பல் தவிர சுயநல, சந்தர்ப்பவாத, பச்சோந்திக் குழுக்கள் சிலவும் தேர்தல் களத்தில் இறங்கி தமிழீழ மக்களின் உண்மையான விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்புகின்றன.

தமிழீழ மக்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் திசைதிருப்ப முனையும் இந்திய சக்திகளுக்கு மரண அடி கொடுப்பார்கள் என்பது திண்ணம். ★

www.tamilarangam.net


தர்மலிங்கம் துரையம்மா
வயது (43)


க. சிவானந்தசுந்தரம்
வயது (65)


பொன்னையா சிறீதரன்
(கஜன்) வயது (24)


சின்னத்துரை
குணரத்தினம்
வயது (33)


நா. கருணானந்தசிவம்
வயது (45)


சிவலிங்கம் சிவஅழகன்
வயது (22)


சுந்தரம் வைகுந்தநாதன்
வயது (46)


கந்தையா அரசக்கோன்
வயது (25)


செல்லத்தம்பி
செல்வானந்தம்
வயது (23)


கிருஷ்ணானந்தன்
(மாஸ்டர்)
வயது (36)


அருளானந்தம் ரவிசந்த்
வயது (24)


பொன்னுத்துரை
வண்ணக்கிளி
(முகுந்தன்)வயது(34)


சி. சிவராசபிள்ளை
வயது (40)


கனகசபை தனபாலசிங்கம்
வயது (45)]

www.tamilarangam.net

# துரோகிகளின் படையெடுப்பு!

ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு இலங்கை அரசும், இந்திய ''அமைதி காக்கும்'' படையும் மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் என இரண்டு மோசடித் தேர்தல் நாடகங்களை அரங்கேற்றி விட்டு, அடுத்ததாக பாராளுமன்றத் தேர்தலை நடத்த முன்வந்திருக்கின்றன.

ஈழத்தில் தமிழ் மக்கள் பிரச்சினை எதுவும் தீர்ந்தபாடில்லை. பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படுத்தாது தேர்தல்களை நடத்துவதால் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. ஆனால், பதவிப் பித்துப் பிடித்தோரும், இந்திய அரசின் எடுபிடிகளும், இந்திய அரசின் மிரட்டலுக்கு அஞ்சிய பஞ்சோந்திகளும் மீண்டும் அடுத்த தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

தமிழ் மக்கள் எதற்காகப் போராட்டத்தைத் தொடங்கினார்களோ அதற்கான தைத் காரணங்கள் எதையும் ஆராயாமல், அவற்றுக்குப் பரிகாரம் எதுவும் காணாமல் இந்திய இலங்கை அரசுகள் தமது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு தாம் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தை ஈழத்தமிழர்கள் மீது திணித்துள்ளன.

அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகாரமற்ற மாகாணசபையின் பதவியைப் பெறுவதற்கு இந்திய அரசுடன் இரகசிய உடன்பாடு செய்து மோசடித் தேர்தலின் மூலம் மாகாணசபை அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப். குழுவினருடன் டெலோ மற்றும் அமிர்தலிங்கத்தின் தமிழர் ''விடுதலை''க் கூட்டணி என்பன ஒரே அணியாக பாராளுமன்றத் தேர்தலில் குதித்துள்ளன.

அவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் பிளாட், ஈரோஸ் அணிகள் தனித்தனியாக களத்தில் இறங்கியிருக்கின்றன.

(ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த பல வேட்பாளர்கள் இறுதி நேரத்தில் தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.)

இத்தேர்தலில் தமிழ்மக்கள் பங்குபெற்றால் போலி மாகாணசபையை ஏற்றதாகவே கருதப்படும். இந்திய அமைதிப்படை தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்கள் சரிதான் என ஏற்றுக்கொண்டதாகவே கருதப்படும். தமிழ் பகுதிகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த முடியாத மாகாணசபையால், சிங்கள இராணுவத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாத மாகாணசபையால், தமிழர்களின் கல்வி பொருளாதாரத்தை வளப்படுத்த அதிகாரமில்லாத மாகாணசபையால், தமிழினத்தைக் கருவறுப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கக்கூடிய மாகாணசபையால் தமிழினத்துக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

தமிழீழம் ஒன்றுதான் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும். எனவே, போலியான இடைக்கால ஏற்பாட்டுக்கு தமிழ்மக்கள் ஆதரவோ, அனுமதியோ அளிக்கக்கூடாது. தமிழ் மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து தேர்தலில் நிற்கும் துரோகிகளுக்கு தமிழ் மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

## தேர்தல் களத்தில் நிற்பவர்கள் யார்?

- ''ஈழத்தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழீழம் ஒன்றுதான் பரிகாரம். தமிழீழத்தைப் பெற போராடுவதற்கு 1977-ஆம் ஆண்டு தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி தமிழ் மக்கள் வாக்குச்சீட்டின் மூலம் அனுமதியையும், ஆணையையும் தரவேண்டும்'' என்று தேர்தலில் நின்று தமிழ் மக்களின் ஆணையையும், அனுமதியையும் பெற்ற தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினர்,
- ''தமிழீழத்தைப் பெறுவதற்கு பாராளுமன்றம் பரிகாரமல்ல. பாராளுமன்றத்தை பிரச்சார மேடையாகவே பயன்படுத்துவோம்'' என்ற தமிழர் ''விடுதலைக்'' கூட்டணியினர்,
- ''பாராளுமன்றத்துக்கு வெளியில் தேசிய மன்றத்தை அமைத்து தமிழீழத்துக்கான போராட்டத்தை நடத்துவோம்'' என்ற தமிழர் ''விடுதலை''க் கூட்டணியினர்,

www.tamilarangam.net



பதவி உயர்வு கொடுத்துப் பாராட்டியது. அதே போலத்தான் இன்றும் அதே போன்ற அக்கிரமங்களைச் செய்துவரும் ஈ. பி. ஆர். எல். எப். இனரின் இந்தக் கொலைவெறித் தனத்தை இந்திய அரசின் பிரச்சாரப் பீரங்கி களான தொலைக்காட்சி, வானொலி என்பன மூடிமறைத்து அவர்களை ஜனநாயகவாதி களாகவும், தமிழீழத்தில் அமைதியை நிலை நாட்டிக் கொண்டிருக்கும் அஹிம்சாமூர்த்தி களாகவும் காட்டும் முயற்சியில் முழுமூச்சாக இறங்கியிருக்கின்றன ராஜீவ்காந்திக்கு அடுத்தபடியாக இந்தியத் தொலைக்காட்சியில் ஈ. பி. ஆர். எல். எப். இனர்தான் அதிகநேரம் காட்டப்பட்டு வருகின்றனர்.

தற்பாதுகாப்புக்காகவும், தமிழீழ விடுதலைப் போராட்டம் திசைதிருப்பப்படுவதிலிருந்து தடுப்பதற்காகவும் தவிர்க்கமுடியாத நிலையில் விடுதலைப் புலிகள் வெளிப்படையாக முன்னர் மேற்கொண்ட களையெடுப்பு நடவடிக்கைகளை "மிருகத்தனமானது", "பழிவாங்கும் நடவடிக்கை", "பதவிவெறிச் செயல்" என்றெல்லாம் விமர்சித்த சில தமிழகப் பத்திரிகைகளும், இந்திய அரசின் குத்தகைப் பேச்சாளர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் அப்பட்டமான வெறித்தனத்தை ஜீரணித்துக்கொண்டு அவர்களை ஜனநாயகத்தின் காவலர்களென்றும், தமிழினத்தின் பிரதிநிதிகளென்றும் அமைதியை நிலைநாட்ட வந்த அகிம்சாமூர்த்திகள் என்றும் பாராட்டுகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்ததற்காக மூன்று மாதங்களில் ஈ. பி. ஆர். எல். எப். இனரால் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் பட்டியலும், விபரங்களும் தேதிவாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

| | கொல்லப்பட்ட தேதி | கொல்லப்பட்டவர்களின் பெயர் | கொல்லப்பட்டவர்களின் சொந்த ஊர் |
|---|---|---|---|
| 1. | 1-10-88 | வைத்தியலிங்கம், பரமநாதன் (மீன்பிடிச் சங்கத் தலைவர்) | மயிலிட்டி |
| 2. | 2-10-88 | நந்தகுமார் (21) பல்கலைக் கழக மாணவன் | சிறுப்பிட்டி |
| 3. | 2-10-88 | ராசையாசாமி (36) | இடைக்காடு |
| 4. | 3-10-88 | சிவலிங்கம் சிவ அழகன் (22) | அச்சுவேலி |
| 5. | 4-10-88 | வேலுப்பிள்ளை செல்லக்கண்டு (60) | கெருடாவில் |
| 6. | 4-10-88 | செல்லக்கண்டு, சோதிலிங்கம் (29) | ,, |
| 7. | 5-10-88 | சிவசுப்பிரமணியம் (52) | இடைக்காடு |
| 8. | 5-10-88 | வேல்முருகு (51) | ,, |
| 9. | 5-10-88 | தர்மலிங்கம் துரையம்மா ([பெண்] (43) | நல்லூர் |
| 10. | 6-10-88 | பொன்னம்பலம் (45) | மைலங்காடு |
| 11. | 10-10-88 | அருளானந்தம், அன்ரனி (38) (மீன்பிடிச் சங்கத் தலைவர்) | ஆழியவளை |
| 12. | 13-10-88 | அருளானந்தம் ரவிசந்த் (24) | காங்கேசன்துறைவீதி |
| 13. | 14-10-88 | பொன்னையா, சிறீதரன் (24) | உடுவில் கிழக்கு |
| 14. | 14-10-88 | கதிர்காமநாதன் (24) | யாழ்ப்பாணம் |
| 15. | 21-10-88 | சிவானந்த சுந்தரம் (65) (தமிழீழ மக்கள் மன்றத் தலைவர்) | பருத்தித்துறை |
| 16. | 22-10-88 | செல்லையா, கிளைட்டன் (24) | யாழ்ப்பாணம் |
| 17. | 25-10-88 | சுப்பிரமணியம், ரவீந்திரா (22) (விஞ்ஞான ஆசிரியர்) | சங்கானை |

www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
| 18. | 25-10-88 | சி. சிவராசபிள்ளை (40) (சுன்னாகம் வர்த்தகர் சங்கத் தலைவர்) | மல்லாகம் |
| 19. | 26-10-88 | ராசசங்கரி (தென்மராட்சி பிரஜைகள் குழுத் தலைவர்) | சாவகச்சேரி |
| 20. | 28-10 88 | க. பிரேமரூபன் மினிவேன், கூல்பார் உரிமையாளர்) | காங்கேசன்துறை |
| 21. | 3-11-88 | சுந்தரம் | சரசாலை |
| 22. | 3-11-88 | மனோகரன் | சாவகச்சேரி |
| 23. | 4-11-88 | கனகசபை தனபாலசிங்கம் (45) (வடபிரதேச போக்குவரத்து சபையின் மக்கள் தொடர்பு அதிகாரி) | காங்கேசன்துறை |
| 24. | 9-11-88 | ஜெயக்குமார் | மல்லாகம் |
| 25. | 9-11-88 | சோமசுந்தரம் | யாழ்ப்பாணம் |
| 26. | 11-11-88 | ஐயாத்துரை | காரைநகர் |
| 27. | 12-11-88 | கிருஸ்ணானந்தன் மாஸ்டர் (36) (பொருளியல் ஆசிரியர்) | யாழ்ப்பாணம் |
| 28. | 13-11-83 | சுந்தரம், வைகுந்தநாதன் (46) | திருநெல்வேலி |
| 29. | 13-11-88 | அன்ரன், அலன் | அரியாலை |
| 30. | 1-12-88 | சின்னத்துரை, குணரத்தினம் (33) | பளை |
| 31. | 1-12-88 | ஜெயக்குமார் (23) | ஏழாலை |
| 32. | 2-12-88 | தம்பிப்பிள்ளை, சிவம் (17) | சாவகச்சேரி |
| 33. | 3-12-88 | சிவதாசன், நிர்மலா | கருகம்பானை |
| 34. | 4-12-88 | நா. கருணானந்தசிவம் (45) (நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்) | காங்கேசன்துறை |
| 35. | ,, | கணேஸ் (23) | யாழ்ப்பாணம் |
| 36. | ,, | வைரமுத்து, சின்னாச்சி (45) | கொக்குவில் |
| 37. | ,, | குமாரசாமி (26) | கொக்குவில் |
| 38. | 5-12-88 | செல்லத்தம்பி, செல்வானந்தம் (23) | உடுப்பிட்டி |
| 39. | 8-12-88 | கந்தையா, அரசக்கோன் (52) (தனியார் பேருந்துச் சங்கத் தலைவர்) | பெரியவிளான் |
| 40. | 11-12-88 | பொன்னுத்துரை வண்ணக்கிளி (முகுந்தன்)(34) | மயிலிட்டி |
| 41. | ,, | காதர் | அளவெட்டி |
| 42. | 14-12-88 | பெர்னான்டோ | கல்வியங்காடு |
| 43. | 19-12-88 | தவஞானம் | ,, |
| 44. | ,, | அருள்ஞானம் | சுளிபுரம் |
| 45. | ,, | ரவீந்திரன் | கிளிநொச்சி |
| 46. | 24-12-88 | சாந்தகுமார் | ,, |
| 47. | ,, | கஜேகராஜன் | காங்கேசன்துறை |
| 48. | ,, | சந்திரன் | |

www.tamilarangam.net

# களத்தில்

**5-1-89:** இந்தியப்படையினரின் துணையோடு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை வேட்டையாடி வந்த ஈ.பி.ஆர். எல். எப். குழுவைச் சேர்ந்த 30 பேர் அதே நோக்கத்தோடு வதிரிக்குச் சென்றபோது அங்கு திடீரென்று அவர்களை எதிர் கொண்டு 5 விடுதலைப்புலி வீரர்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சண்டையில் ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐச் சேர்ந்த ஒருவர் கொல்லப் பட்டார். ஏனையோர் பலத்த சேதத்துடன் பின்வாங்கி ஓடினர். காயமடைந்து ஓடியவர்களில் ஐவர் மந்திகை மருத்துவ மனையில் மரணமடைந்தனர். அவர்கள் விட்டுச்சென்ற ஏ.கே. துப்பாக்கிக்கான ரவைக்கூடு ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

வல்வெட்டித்துறையில் விடுதலைப்புலி இயக்க வீரர்கள் இருவரை இந்தியப் படையினர் சுற்றி வளைத்ததை அடுத்து அங்கு சண்டை மூண்டது. விடுதலைப்புலி இயக்க வீரர்கள் இருவரும் கைக் குண்டுகளை வீசி, ஏ.கே. இயந்திரத் துப்பாக்கியினால் சுட்டபடி இந்தியப் படையினரின் முற்றுகையை முறியடித்து தப்பிச் சென்றனர். விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு காப்டன் உட்பட 2 இந்தியப்படையினர் காயமடைந்தனர்.

சாவகச்சேரியில் விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் றேகாவும் இன்னொரு வீரரும் நடந்து சென்றபோது இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் றேகா வீர மரணமடைந்தார். மற்ற வீரர் அத்தாக்குதலினின்றும் தப்பி முகாம் திரும்பினார்.

**7-1-89:** காலை 10 மணியளவில் திருகோணமலை மாவட்டம் தென்னம்பற்றை என்ற இடத்தில் இந்தியப்படையினர் ரோந்து சென்ற டிரக்வண்டி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் நான்கு இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து எறிகுண்டைச் செலுத்தக்கூடிய எஸ். எல். ஆர். துப்பாக்கி ஒன்று, எல். எம். ஜி. துப்பாக்கி ஒன்று, புகைக்குண்டுகள் 4, கண்ணிவெடிகளைக் கண்டு பிடிக்கும் கருவி ஒன்று, சீருடை ஒன்று என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மாலை 6 மணியளவில் மன்னாரிலுள்ள நானாட்டான் என்னும் இடத்தில் உள்ள பாடசாலையில் தங்கியிருந்த இந்தியப் படையினர் மீதும் ஈ.பி.ஆர்.எல்.எப். இனர் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காவலுக்கு நின்ற ஈ.பி.ஆர்.எல்.எப். ஐச் சேர்ந்த இருவர் கொல்லப் பட்டனர். அதைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற ஈ. பி. ஆர். எல். எப். இனர் அப்பகுதியில் உள்ளவர்கள்மீது கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதலில் 2 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

இரவு 7 மணிக்கு திருகோணமலை மாவட்டம் முந்திரிகைக் குளம் என்ற இடத்தில் லாரியில் சென்ற சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து, ரீ-56 துப்பாக்கி, ரவைகள், கைக்குண்டுகள், துப்பாக்கி உறைகள் ரவைக் கூடுகள் என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் இல்லை.

**8-1-89:** மட்டக்களப்பு மாவட்டம் குடுமிமலை என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கிய ஒரு இந்திய வீரர் காலை இழந்தார். இதனால் நிலை குலைந்த படையினரின் துப்பாக்கி ஒன்று வெடித்ததால் மேலும் ஒரு இந்திய வீரர் மரணமடைந்தார்.

**9-1-89:** காலை ஏழு மணியளவில் திருகோணமலையில் நடந்து சென்ற இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த சண்டையில் 3 இலங்கை இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். அவர்களிடமிருந்து எல். எம். ஜி. துப்பாக்கி ஒன்று, T-56 ரக துப்பாக்கிகள் இரண்டு, ரவைகள் 640, ரவைக் கூடுகள் 14, கைக்குண்டுகள் 8, மற்றும் 8 துப்பாக்கி உறைகள், சீருடைப் பைகள், தலைக் கவசங்கள், மழைக்கோட்டுகள் என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

**17-1-89:** அன்று வவுனியாவில் முகாமைவிட்டு வெளியே வந்த சிங்கள இராணுவத்தினர் 13 அப்பாவித் தமிழ்ப் பொது மக்களை வெட்டிக்கொன்றதை

www.tamilarangam.net



தொடர்ந்து அன்று காலை வவுனியாவுக்கும் மாமடுவ என்ற இடத்திற்கும் இடையில் சென்றுகொண்டிருந்த டிரக் வண்டி ஒன்றை விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்கியதில் மூன்று சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர். அவர்களிடமிருந்து ஏ. கே. எல். எம். ஜி, ரீ-56 எம்டி-1, மற்றும் 303 துப்பாக்கிகள் ஒவ்வொன்றையும் மற்றும் இராணுவ உபகரணங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இத் தாக்குதலில் ரகு என்னும் விடுதலைப் புலி இயக்க வீரர் வீரமரணமடைந்தார்.

அதே தினம் மன்னார் மாவட்டம் பேசாலைக்கும் துறைப்பாட்டுக்கும் இடையில் நடைபவனியாக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தியப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த நேரடி மோதலில் இந்தியப்படையினர் தரப்பில் இருவர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமுற்றனர். இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் இல்லை.

காலை 6-30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்டம் நாகர் கோயில், எழுதுமட்டுவாள் வீதியால் தமது முகாமிலிருந்து நடந்து சென்று கொண்டிருந்த இந்தியப் படையினரை முகாமிற்கு 500 மீட்டர் தூரத்தில் தடுத்துநிறுத்தி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலில் 10 இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து இரண்டு எஸ். எம். ஜி, எஸ். எல் ஆர். துப்பாக்கிகளும், அவற்றுக்கான மேலதிக ரவைக்கூடுகள், ரவைகள், கைக்குண்டுகள் என்பவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியதுடன் இந்திய இராணுவ உயர் அதிகாரி உட்பட இரண்டு இந்தியப்படையினரது சடலங்களையும் கைப்பற்றினர். இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் இல்லை.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் என்னும் இடத்தில் சிங்களப் போலீசாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடுமையான சண்டையில் சிங்களப் போலீஸ் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தனுக்கும் பாவற்குளத்திற்கும் இடையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு விடுதலைப் புலிகள் மீது இந்தியப்படையினர் மறைந்திருந்து தாக்கியதில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

**18-1-89:** சுண்டிக்குளத்திற்கு அருகே உள்ள நல்லதண்ணித் தொடுவாய் என்ற இடத்தில் முகாமிட்டிருந்த விடுதலைப் புலிகளை சுற்றிவளைத்த இந்தியப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலில் 7 இந்தியப்படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். அவர்களிடமிருந்து ஒரு எல். எம். ஜி, இரண்டு எஸ். எம். ஜி ஆகிய துப்பாக்கிகளும், அவற்றுக்கான ஏழு மேலதிக ரவைக்கூடுகளும், ரவைகளும், தொலைத் தொடர்பு கருவி, வெடிமருந்துகள் உட்பட பல இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மாதவன் என்னும் விடுதலைப்புலி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

**19-1-89:** மட்டக்களப்பு மாவட்டம் அரியாஓடை என்ற இடத்திலுள்ள இந்தியப்படையினரின் வெளிப் பாதுகாப்பு அரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் சேதமில்லை.

யாழ்ப்பாணம் சந்திரன் கோயிலடியில் நடைபெற்ற இன்னொரு சண்டையில் இரண்டு இந்தியப் படையினர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்.

வடமராட்சியிலுள்ள அல்வாயில் நடந்து சென்ற இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் இந்தியப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

**20-1-89:** காலை 8-30 மணியளவில் மன்னார் மாவட்டம் சிலாவத்துறைக்கும் கயுவத்தைக்கும் இடையில் சென்றுகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினரின் ஜீப் வண்டியை இடைமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 7 சிங்கள இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். சிங்கள இராணுவத்தினரிடமிருந்து ரீ 56 ரக துப்பாக்கிகள் 5, எறிகுண்டுவீசும் கருவி 1, தொலைத்தொடர்புக் கருவி 1, மற்றும் 21 ரவைக்கூடுகள், 420 ரவைகள், தலைக்கவசங்கள் 2 என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

1-30 மணியளவில் முள்ளியவளைக்கும் காட்டுவினாயகர் கோவிலுக்கும் இடையில் உள்ள இந்திய இராணுவ முகாமில் 200 மீட்டர் தூரத்தில் விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைக்க முயன்ற இந்திய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள்

www.tamilarangam.net



வீராவேசமாக நடத்திய எதிர்த் தாக்குதலில் 6 இந்தியப்படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து 1 எஸ். எம். ஜி. துப்பாக்கி. 3 ரவைக்கூடுகள், 69 ரவைகள் என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

**21-1-89 :** காலை 8-30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் என்ற இடத்தில் ஈ. என். டி. எல். எப். துரோகக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் ஈ.என்.டி.எல்.எப். ஐச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டனர். எஞ்சிய ஒருவர் தப்பி ஓடினார். அவர்களிடமிருந்து 2 எல். எம். ஜி., 1 எஸ். எல்.ஆர்., 6 ரவைக் கூடுகள், TNT குண்டுகள் 5, துப்பாக்கி உறைகள் 3, 150 ரவைகள் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

யாழ் மாவட்டம் அரியாலையில் யாழ்ப்பாணத் தளபதி பொட்டுவின் வீட்டுக்குச் சென்று வீட்டிலுள்ள பொருட்களை எரித்துக்கொண்டிருந்த இந்தியப்படையினர் மீது விரைந்து சென்ற விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் 2 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர் 3 பேர் காயமடைந்தனர்.

**22-1-89 :** காலை 7-30 மணியளவில் உடுப்பிட்டி முகாமிலிருந்து 200 மீட்டர் தூரத்தில் நடந்து சென்ற இந்தியப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொணட கிளைமோர் தாக்குதலில் 6 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் எதுவித சேதமுமின்றி முகாம் திருப்பினர்.

குஞ்சுப்பாலம் என்ற இடத்தில் பதுங்கியிருந்த இந்தியப் படையினர் அவ்வழியில் சென்ற விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து மூண்ட கடும் துப்பாக்கிச் சண்டையில் 3 இந்தியப் படையினர் கொல்லப் பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமுமில்லை.

**23-1-89 :** விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. சேத விபரம் கிடைக்கவில்லை.

திருகோணமலையில் நடந்து சென்ற இந்திய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமுற்றார்.

**25-1-89 :** யாழ் மாவட்டம் நாவாந்துறையில் துரோகப் படையினரான ஈ. என். டி. எல். எப். இனரின் வேன் ஒன்று விடுதலைப் புலிகளால் எரிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் கொட்டடியில் 11 மணியளவில் ரோந்து சென்று கொண்டிருந்த இந்தியப்போலீசாருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் உயர் அதிகாரி ஒருவர் உட்பட இரண்டு இந்தியப் போலிசார் கொல்லப்பட்டனர்.

திருகோணமலையில் 2 ஈ. பி. ஆர். எல் எப். இனர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

திருகோணமலை கட்டைபறிச்சான் பாலத்தில் காவல் புரிந்த இந்தியப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒரு எஸ். எல். ஆர். துப்பாக்கியும் அதற்கான 20 ரவைகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

**27-1-89 :** யாழ்மாவட்டம் கோண்டாவில் என்ற இடத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த இந்திய இராணுவத்தினரை இடைமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும்ஒருவர்காயமடைந்தார்.

**28-1-89 :** வடமராட்சி வதிரி என்னும் இடத்தில் ஈ. பி. ஆர். எல். எப். இனரும் இந்திய இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து மக்கள் வசிக்கும் பகுதிக்குள் புகுந்து பொது மக்கள்மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்தியபோது விரைந்து சென்ற விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

**29-1-89 :** காலை 9 மணியளவில் திருகோணமலை மாவட்டம் புலிகண்டிக்கும், குறிஞ்சாகுளத்துக்கும் இடையில் வைத்து ரோந்து சென்ற இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இலங்கை இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் எஞ்சியோர் பின்வாங்கி ஓடிவிட்டனர். அவர்களிடமிருந்து டி. 56 துப்பாக்கிகள் 2, ரவைகள் 240, ரவைக்கூடுகள் 8, துப்பாக்கி உறைகள் 2 உட்பட மேலும் பல இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

**30-1-89 :** திருகோணமலை மாவட்டம் இலுப்பங்குளம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் 5 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித சேதமும் இல்லை.

அதே இடத்தில் சின்னராஜா (கண்ணாடி) என்ற இனத் துரோகியை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். ★

www.tamilarangam.net

# வாக்குமூலம்

7/1, கல்லடி வளவு ஒழுங்கை,
பருத்தித்துறை.
14-10-88.

அதிகாரி,
இந்திய அமைதிப்படை.
மந்திகை.

ஐயா,

## 12-10-88-இல் வீட்டுச் சோதனையின்போது களவு

இன்று மாலை மேஜர் சுகுமாரிடம் நான் வாய் மூலம் செய்த முறையீட்டை உறுதிப்படுத்த இதனை எழுதுகிறேன்.

என்னுடைய இரண்டு பெண் பிள்ளைகள் வீடுகளுக்கு (இவர்களில் ஒருவர் மந்திகை மருத்துவ மனையில் பல் மருத்துவராக இருக்கிறார்.) -12-10-88 காலை 6-30 மணி அளவில் 4 அல்லது 5 இந்திய அமைதிப் படை வீரர்கள் வந்தார்கள். வீடுகளைச் சோதனையிடப் போவதாகக் கூறினார்கள். நான் அவர்களை ஒவ்வொரு அறையாக அழைத்துச் சென்று அலமாரிகள் - உடுப்புப் பெட்டிகள் - 'ட்றங்குப்' பெட்டிகள் அனைத்தையும் திறந்து காட்டினேன். சோதனையை முடித்துக் கொண்டு அவர்கள் சென்றார்கள். இந்தச் சோதனையின் போது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரையும் கூடவே அழைத்து வந்து நாகரீகமாக அவர்கள் நடந்துகொண்டார்கள்.

கால் மணி நேரம் கழித்து - 4 அல்லது 5 பேரைக் கொண்ட இன்னொரு இந்திய அமைதிப் படைப் பிரிவு வீடுகளைச் சோதனை இட வந்தது. சற்று முன்பே வீடு சோதனை இடப்பட்டது என்று நான் கூறியும், அதைப் பொருட்படுத்தாமல் - தாங்கள் திரும்பவும் வீட்டைச் சோதனையிடவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். திரும்பவும் அவர்களை ஒவ்வொரு அறையாக அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. இவர்கள் சாமி அறை - திருமணப் புகைப்பட தொகுப்பேடு - என் மகளின் கைப்பை எல்லாவற்றையுமே துருவித் துருவி ஆராய்ந்தார்கள். ஒரே நேரத்தில் இரண்டு படை வீரர்கள் என் மகளின் அறையைச் சோதனையிட்டதால் அவர்களை முழுமையாக எங்களால் கவனிக்க முடியவில்லை.

12, 13 - ஆம் தேதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் இந்த இரு நாட்களும் என் மகள் வேலைக்குப் போக முடியவில்லை. இன்று காலை 7-15-க்கு வெளியே சென்ற நான் மத்தியானம் 1 மணிக்கு வீடு திரும்பிய போது - என் மகள் என்னிடம் சொன்னாள்:- ''அப்பா, காலையில் வேலைக்குப் போகக் கிளம்பியபோதுதான் பார்த்தேன் - மாலையில் என் மேசையில் நான் கழற்றிவைத்த 'சிற்றிசன்' பெண்கள் கைக் கடிகாரத்தைக் காணவில்லை.'' இரண்டாவது தடவை வீடு சோதனையிட வந்த அமைதிப்படை ஆட்கள் அதை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்றே கருதுகிறோம்.

இத்திருட்டு சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன். ஒரே நாளில் - ஒரு மணி நேரத்திற்குள் எதற்காக இரு தடவைகள் ஒரு வீட்டில் சோதனை நடத்தப்பட வேண்டும் என்பதையும் தாங்கள் விசாரிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் யாரும் இச் சோதனையில் ஈடுபட்டவர்களோடு வரவில்லை என்பதையும் - இரண்டாவது தடவை சோதனையிட வந்தவர்களில் ஒருவரின் மேல்சட்டைக் கையில் ஒரு கறுப்புப்பட்டியைத் தான் கண்டதாக என் மகள் கூறுவதையும் தங்களுக்கு அறியத் தருகிறேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்)
கே. சிவானந்தசுந்தரம்

★ இந்தியப் படையின் துணையோடு ஈ.பி.ஆர்.எல்.எப். கூலிப்படையால் கொடுமையாகப் படுகொலை செய்யப்படுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பு தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் திரு. கே. சிவானந்தசுந்தரம் அவர்கள் வீட்டில் நடந்த நிகழ்ச்சி.

www.tamilarangam.net






முன் அட்டையில்: பிஞ்சு வயதில் துப்பாக்கியை ஆராயும் இந்த எட்டு மாதக் குழந்தை வேறுயாருமல்ல; இந்தியசிங்களப் படைகளின் கூட்டுச்சதியால் நஞ்சை உண்டு வீர மரணம் அடைந்த விடுதலைப்புலிகள் தளபதி லெப் கேணல் புலேந்திரனின் மகன் தர்மசீலன். தன் தந்தையை இவன் பார்த்ததில்லை. ஆனால்.... அப்பாவைப் போலத்தான்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைக்காக இன்னுயிரை ஈந்த
குமரப்பா, புலேந்திரன் மற்றும் பதின் மரின் நினைவுஸ்தூபி. திலீபன் நினைவுஸ்தூபி







திலீபனின் நினைவு நாளன்று
மக்கள் எல்லா இடங்களிலும்
பெருமளவில் கூடி அஞ்சலி
செலுத்துகின்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்